றார்கள். தேர்வாணைக் குழுவினரால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, முதலிலே எந்தத் தேதியிலிருந்து அவர்கள் பணியிலே முழு ஆசிரியராக சேர்க்கப்பட்டார்களோ அந்தத் தேதியிலிருந்து அவர்களுக்குப் பணி வரன் முறைப்படுத்தப்படுகிறது. மற்ற பணிப் பழகு ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், 175 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, பணிப்பழகு பி.டி. ஆசிரியர்கள் 175 ரூபாய் வாங்கிய காலத்தையும் தேர்வு நிலைக்குக் கணக்கிடும்போது சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா? அவ்வாறு சேர்த்துக்கொள்வதற்கு அரசு மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படிச் சேர்க்க ஆரம்பித்தால் வேறு பிரச்சினைகள் வருகின்றன. இரண்டாம் நிலை, முதல் நிலை ஆசிரியர்களின் பிரச்சினையும் இதுபோன்றதுதான். அப்புறம் செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றிய அந்தக் காலத்தையும்கூட பி.டி. ஆசிரியர்களுக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியது வரும். எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று சொல்லி யிருக்கிறோம்.

பாசனத்திற்குத் தண்ணீர் விடுதல்

***122 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் (திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா சார்பில்) :** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்திற்குட்பட்ட, உடுமலை வட்டத்திலுள்ள ஏழுகுளம் (Seven Tanks) ஆயக்கட்டிற்குட்பட்ட நிலங்களின் பாசனத்திற்கு, 1983 ஆம் ஆண்டு, ஆகஸ்டு திங்கள் இறுதிவரை தண்ணீர் விடப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) உண்மையல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே. பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத்திட்டம் பெரியார், கோவை மாவட்டங்களில் வேறு ஏதேனும் புதிய பகுதிகளுக்குப் பயனடையச் செய்கின்ற யோசனை அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, தற்போது இருப்பதைவிட பெரியார் மாவட்டத்திலேயும், கோவை மாவட்டத்திலேயும், காங்கயம், வெள்ளக்கோயில், பொங்களூர் ஆகிய மூன்று தொகுதிகளுக் குட்பட்ட சுமார் 34,000 ஏக்கருக்குக் கூடுதலாகப் பாசன வசதி செய்யக்கூடிய செயற்குறிப்பு ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் நிர்வாகக் கழகம்

***123 வினா.**—**திரு. க. மீனாட்சிசுந்தரம் மற்றும் டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தமிழகத்தில் நீர் நிர்வாகக் கழகம் ஒன்றினை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலிருக்கின்ற நீர்நிலைகளை நாம் முடிந்த அளவிற்குப் பயன்படுத்திவிட்டோம். எனவே இருக்கின்ற நீரைச் சிக்கனமாகச்சேர்த்து வைத்து எப்படி ஜாக்கிரதையாகப் பயன்படுத்துவது என்ற அறிவுரை வழங்குவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறதா?

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஐக்கிய அமெரிக்க நாட்டு உதவியுடன் தமிழகத்தின் பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, மற்றும் ஏனைய துறை அலுவலர்களுக்கு பாசன நீர் நிர்வாகத்தில் பயிற்சி அளிக்க ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. Irrigation Management Training Institute என்ற பெயரில் துவக்க இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, வெள்ளக் காலங்களில் சில பகுதிகளிலே நீர் அதிகமாக வருகிறது. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே கடைமடைப் பகுதிகளிலே ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் வருகிறது. அங்கே வெள்ளத்தால் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. தண்ணீரும் வீணாகிறது. அந்தப் பகுதியிலே வெள்ளத்தால் வரும் தண்ணீரைத் தேக்கி, பின்னாலே